பாரதி பள்ளி "தமிழ் விளையாடுவோம் 2024"
Bharathi Academy “Let’s Play Tamil 2024”

# தமிழ் மொழி போட்டிகள் 2024

தமிழ் மொழியை அடுத்த தலைமுறைகளுக்குக் கொண்டு செல்வது எம் அனைவரதும் தலையாய கடமையாகும். அந்த வகையில் 1994 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பாரதி பள்ளி 3 தசாப்தங்களைக் கடந்து, அகவை முப்பதை நிறைவு செய்திருக்கின்றது.

ஆண்டுதோறும் நடக்கும் "தமிழ் விளையாடுவோம்" நிகழ்ச்சி, இவ்வாண்டு ஒரு சிறப்பு நிகழ்ச்சியாக நடைபெற உள்ளது. ஒஸ்ரேலியாவில் இளம் தலைமுறையினரின் தமிழ் மொழி ஆற்றலை ஊக்குவிக்கும் முகமாக, பல்வேறு தமிழ் மொழி சார்ந்த போட்டிகள் இடம்பெற உள்ளன. பாரதி பள்ளி மாணவர்களுக்கு மட்டுமன்றி, தமிழ் ஆர்வமுள்ள அனைத்து மாணவர்களுக்குமான வாய்ப்பாக இது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. மெல்பனை வசிப்பிடமாகக் கொண்ட, 3 தொடக்கம் 18 வயது வரையிலான எவரும் இந்தப் போட்டிகளில் பங்கு பெறலாம்.

வாய்மொழித் தொடர்பாடல், சொல்வதெழுதல், வாசிப்பு, சொற்தேடல், ஓவியம் வரைதல் ஆகிய போட்டிகள் நடைபெற உள்ளன. போட்டிகளுக்கான விதிமுறைகளை நன்கு வாசித்து, ஆர்வம் உள்ளவர்கள் போட்டிகளில் பங்கேற்க முடியும். விண்ணப்பப் படிவங்களை விண்ணப்ப முடிவுக்கு முன்னதாக பூர்த்தி செய்வது அவசியமாகும்.

போட்டிகள் பற்றிய அனைத்து விபரங்களையும் பாரதி பள்ளியின் இணையத்தளமான https://bharathi.org.au/index.php/n-e/lets-play-tamil/ இல் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல் எதுவும் தேவைப்படுமிடத்து, கீழ்க்கண்ட மின்னஞ்சல் மூலம் அல்லது என்ற தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளலாம்.
மின்னஞ்சல்: admin@bharathi.org.au

தொலைபேசி: 1 300 933 922 / 0433 354 401

போட்டி நடைபெறும் திகதி: 27 October, 2024 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம்: முற்பகல் 9:30 தொடக்கம் 10:30 வரை

இடம்: The Lakes South Morang College, 80 Jardier Terrace, South Morang.

விண்ணப்ப முடிவுத் திகதி: 06 October, 2024

# Tamil Competitions 2024

In celebration of the 30th anniversary of Bharathi Academy, this year's Let’s Speak Tamil event will feature a special Tamil & Art competition. We invite not only Bharathi Academy students but all children aged 3 to 18 living in Melbourne to participate.

The competition will include the following categories: Oral Communication, Dictation, Reading, Word Search, and Art. Participants are encouraged to carefully review and understand the details for each competition category.

Registrations must be received before the specified deadline. All the details about the competitions are available on our web page https://bharathi.org.au/index.php/n-e/lets-play-tamil/ . If you need any further information, please contact us using the following email address or phone number.

Email: admin@bharathi.org.au
Telephone: 1 300 933 922 / 0433 354 401

Competition Date: 27 October, 2024 (Sunday)

Time: 9:30 am - 10:30 am

Place: The Lakes South Morang College, 80 Jardier Terrace, South Morang.

Registration End Date: 06 October, 2024

# I. பொது விதிமுறைகள்

1. பிரிவுகளும் பிரிவுகளுக்கான போட்டிகளும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வயது 30.04.2024 அன்று உள்ளபடி கருத்தில் கொள்ளப்படும்.

| பிரிவு | வயது | பிறந்த திகதி | போட்டிகள் |
|---|---|---|---|
| பாலர் பிரிவு | 3 - 5 | 01/05/2018 - 30/04/2021 | வாய்மொழித் தொடர்பாடல் போட்டி<br>ஓவியப் போட்டி |
| ஆரம்பப் பிரிவு | 6 - 7 | 01/05/2016 - 30/04/2018 | வாய்மொழித் தொடர்பாடல் போட்டி<br>ஓவியப் போட்டி |
| கீழ்ப் பிரிவு | 8 - 9 | 01/05/2014 - 30/04/2016 | வாய்மொழித் தொடர்பாடல் போட்டி<br>ஓவியப் போட்டி<br>சொல்வதெழுதல் போட்டி<br>வாசிப்புப் போட்டி |
| மத்திய பிரிவு | 10 - 12 | 01/05/2011 - 30/04/2014 | வாய்மொழித் தொடர்பாடல் போட்டி<br>ஓவியப் போட்டி<br>சொல்வதெழுதல் போட்டி<br>வாசிப்புப் போட்டி<br>சொற்தேடல் போட்டி |
| மேற் பிரிவு | 13 - 14 | 01/05/2009 - 30/04/2011 | வாய்மொழித் தொடர்பாடல் போட்டி<br>ஓவியப் போட்டி<br>சொல்வதெழுதல் போட்டி<br>வாசிப்புப் போட்டி<br>சொற்தேடல் போட்டி |
| அதிமேற் பிரிவு | 15 - 18 | 01/05/2006 - 30/04/2009 | வாய்மொழித் தொடர்பாடல் போட்டி<br>ஓவியப் போட்டி<br>சொல்வதெழுதல் போட்டி<br>வாசிப்புப் போட்டி<br>சொற்தேடல் போட்டி |

2. அனைத்துப் போட்டிகளுக்குமான விண்ணப்ப மற்றும் முடிவுத் திகதிகள் வருமாறு
    a. **வாய்மொழித் தொடர்பாடல் போட்டி**
        i. விண்ணப்ப முடிவுத் திகதி: 06/10/2024
    b. **ஓவியப் போட்டி**
        i. போட்டி முடிவுத் திகதி: 06/10/2024
        ii. இத்திகதிக்கு முன்னதாக உங்களது ஆக்கங்கள் குறித்த போட்டியின் விதிமுறைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு ஏற்ப அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
    c. **சொல்வதெழுதல் போட்டி**
        i. விண்ணப்ப முடிவுத் திகதி: 06/10/2024.
    d. **வாசிப்புப் போட்டி**
        i. விண்ணப்ப முடிவுத் திகதி: 06/10/2024
    e. **சொற்தேடல் போட்டி**
        i. விண்ணப்ப முடிவுத் திகதி: 06/10/2024

   ஓவியப் போட்டி தவிர்ந்த மற்றைய அனைத்துப் போட்டிகளும் 27.10.2024 தமிழ் விளையாடுவோம் நிகழ்வு அன்று இடம் பெறும்.

3. பங்குபற்றிய அனைத்துப் போட்டியாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

4. ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று (03) இடங்களைப் பெற்ற போட்டியாளர்களுக்கு 'தமிழ் விளையாடுவோம் 2024' நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படும்.

5. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

## II. வாய்மொழித் தொடர்பாடல் போட்டி

1. வயதுப் பிரிவுகளுக்கு ஏற்றவாறு வேறுபட்ட தரத்தில் உரையாடல்கள் அமையும்.

2. கீழே தரப்பட்ட விடயங்களில் நடுவர்கள் போட்டியாளருடன் உரையாடுவார்கள். (இந்தப் போட்டிக்கு எதையும் மனனம் செய்யவேண்டிய அவசியம் இல்லை)

   a. பாலர் பிரிவு : நான், எனது குடும்பம், பழங்கள்
   b. ஆரம்பப் பிரிவு : நான், எனது குடும்பம், நிறங்கள்
   c. கீழ்ப் பிரிவு : பிறந்தநாள் கொண்டாட்டம், செல்லப்பிராணி
   d. மத்திய பிரிவு : பொழுதுபோக்குகள், நண்பர்கள்
   e. மேற் பிரிவு : எனது தனிப்பட்ட உலகம் (நண்பர்கள், பொழுதுபோக்குகள், விருப்பங்கள், விளையாட்டுகள், எதிர்காலம் முதலானவை)
   f. அதிமேற் பிரிவு : எனது தனிப்பட்ட உலகம் (நண்பர்கள், பொழுதுபோக்குகள், விருப்பங்கள், விளையாட்டுகள், எதிர்காலம் முதலானவை)

3. போட்டியாளர் நடுவர்களுடன் ((முடிந்தளவு) தமிழில் உரையாட வேண்டும்.

4. தமிழ் உச்சரிப்பு, சொற்பிரயோகம், உரத்துப்பேசல், உரையாடும் திறன், மற்றும் பங்கேற்கும் திறன்(engagement) என்பவற்றுக்கு ஏற்றவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

-

## III. ஓவியப் போட்டி

1. உங்களுடைய ஆக்கங்கள் உங்களுடைய பிரிவுக்கான கருப்பொருளுக்கு ஏற்ப அமைய வேண்டும்.

    a. பாலர் பிரிவு : எனது குடும்பம்
    b. ஆரம்பப் பிரிவு : எனது பாடசாலை
    c. கீழ்ப் பிரிவு : கடற்கரையில் ஒரு நாள்
    d. மத்திய பிரிவு : ஒரு அழகிய இயற்கைக் காட்சி
    e. மேற் பிரிவு : சூழல் மாசடைதல்
    f. அதிமேற் பிரிவு : மனிதர்களும் வாழ்வும்

2. ஒரு போட்டியாளர் ஒரு ஆக்கத்தை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

3. படைப்புகள் A4 அல்லது A3 வெள்ளைத் தாளில் வரையப்பட்டு இருத்தல் வேண்டும்.

4. படைப்புகள் போட்டியாளரின் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். போட்டியாளரின் பெயர், பிறந்த திகதி, தொடர்பு எண் என்பவற்றை ஆக்கத்தின் பின்புறம் எழுத வேண்டும். அத்தோடு பெற்றோர் ஒருவர் 'இது <போட்டியாளரின் பெயர்> சொந்த ஆக்கம்' என்று எழுதி கையொப்பமிடவேண்டும்.

5. ஆக்கத்திற்கும் கருப்பொருளுக்குமான பொருத்தப்பாடு, ஆக்கத்திறன் (creativity), சுய முயற்சி (originality), கலைத்துவ உள்ளடக்கம் (artistic composition), ஒட்டு மொத்த அழகு (overall aesthetics) மற்றும் கற்பனையின் தனித்துவம் என்பவற்றுக்கேற்றவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

6. உங்களுடைய ஆக்கங்களை பின்வருமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

    a. அருகிலுள்ள பாரதி பள்ளி வளாக அதிபரிடம் கையளிக்கவும். (வளாக விபரங்களை பாரதி பள்ளியின் இணையத்தளத்தில் (https://bharathi.org.au/) பெற்றுக்கொள்ளலாம்.

    அல்லது

    b. கீழே தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

        Bharathi Academy
        5/10-12 Ralph Street,
        Reservoir
        VIC 3073

7. உங்களுடைய ஆக்கங்களை போட்டி முடிவுத் திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட ஓவியங்கள் 'தமிழ் விளையாடுவோம் 2024' நிகழ்வில் காட்சிக்கு வைக்கப்படும்.

## IV. சொல்வதெழுதல் போட்டி

1. பங்கேற்பாளர்களுக்குத் தரப்படும் சொற்கள்/ சொற்தொடர்கள் அவர்களின் வயதின் அடிப்படையில் வேறுபட்டதாகவும், திட்டமிடப்பட்டதாகவும் இருக்கும்.

2. சொற்கள் அல்லது சொற்றொடர்கள் இருமுறைகள் சொல்லப்படும்.

## V. வாசிப்புப் போட்டி

1. போட்டியாளர் வழங்கப்பட்ட உரைப் பகுதிகளை பார்த்து வாசித்தல் வேண்டும்.
2. போட்டியாளர் உரைப் பகுதியை வாசிப்பதற்கு குறிப்பிட்டளவு நேரம் கொடுக்கப்படும்.
3. வாசிக்கும் போது போட்டியாளரின் தொனி, ஏற்ற இறக்கம், தெளிவு, பிழை இன்றி வாசித்தல், தொடர்ச்சியாக வாசித்தல் என்பவற்றுக்கு ஏற்றவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

## VI. சொற்தேடல் போட்டி

1. போட்டியாளர்களுக்குச் சரியாக 15 நிமிடங்கள் வழங்கப்படும்.

2. வயதுப் பிரிவுகளுக்கு ஏற்றவாறு வேறுபட்ட தரத்தில் சொற்தேடல் போட்டிகள் நடைபெறும்.

3. சரியாக கண்டுபிடித்த சொற்களின் எண்ணிக்கை, அதற்கு எடுத்த நேரம் என்பவற்றை கருத்தில் கொண்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.